# ஹஜ் உம்ரா
# தொடர்பான
# சுருக்கமும் அத்கார்களும்

தொகுப்பு:
எம். ஜே. எம். ரிஸ்வான் மதனி

2023-05-26

# பயண துஆக்கள்

----

நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் வாகனத்தின் மீது அமர்ந்ததும்,

**اللَّهُ أَكْبَرُ "அல்லாஹுஃ அக்பர்" என மூன்று தடவைகள் கூறியதன் பின்னால்:**

{ سُبْحَانَ الَّذِي سَخَّرَ لَنَا هَذَا وَمَا كُنَّا لَهُ مُقْرِنِينَ وَإِنَّا إِلَى رَبِّنَا لَمُنْقَلِبُونَ }

**"சுப்ஹானல்லதீ ஸஹ்ஹர லனா ஹாதா. வமா குன்னா லஹுஃ முக்ரினீன். வ இன்னா இலா ரப்பினா லமுன் கலிபூன்" எனக் கூறுவார்கள்.**

**பொருள்:** நாம் இதனை (வாகன்தை வாங்க) வசதி அற்றிருந்த நியைில் அதனை நமக்கு வசப்படுத்தித் தந்த அல்லாஹ்வுக்கே எல்லாப்பு புமும். நிச்சயமாக நாம் நமது இரட்சகனாகிய அல்லாஹ்வின் பக்கம் மீள்பவர்களே! (ஆதார நூல்: முஸ்லிம்).

**மற்றுமொரு துஆ:**

اللَّهُمَّ إِنَّا نَسْأَلُكَ فِي سَفَرِنَا هَذَا الْبِرَّ وَالتَّقْوَى وَمِنْ الْعَمَلِ مَا تَرْضَى اللَّهُمَّ هَوِّنْ عَلَيْنَا سَفَرَنَا هَذَا وَاطْوِ عَنَّا بُعْدَهُ اللَّهُمَّ أَنْتَ الصَّاحِبُ فِي السَّفَرِ وَالْخَلِيفَةُ فِي الْأَهْلِ اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ وَعْثَاءِ السَّفَرِ وَكَآبَةِ الْمَنْظَرِ وَسُوءِ الْمُنْقَلَبِ فِي الْمَالِ وَالْأَهْلِ

**உச்சரிப்பு: "அல்லாஹுஃம்ம இன்னா நஸ்-அலுக்க ஃபீ ஸஃ(f)பரினா ஹாதா, அல் (B) பிர்ர வத்தக்வா. வமினல் அமலி மா தர்ழா. அல்லாஹுஃம்ம ஹவ்வின் அலைனா ஸ(f)ஃபரனா ஹாதா. வத்வி அன்னா (B)புஃதஹுஃ. அல்லாஹுஃம்ம அன்தஸ் ஸாஹி(B)பு ஃபிஸ்ஸஃ(f)பரி, வல்-கலீஃ(f)பது (f)ஃபில் அஹ்லி. அல்லாஹுஃம்ம இன்னா நவூது (B)பிக மின் வஃதாயிஸ் ஸஃ(f)பரி, வகஆ(B) பத்தில் மன்ழரி, வ-சூயில் முன்கலபி(B) (f)ஃபில் மாலி வல் அஹ்லி."**

**பொருள்:** யா அல்லாஹ்! எங்களின் இந்தப் பயணத்தில் நன்மை செய்வதையும், அஞ்சிவாழ்வதையும் நீ பொருந்திக் கொள்கின்ற அமல் செய்வதையும் உன்னிடம் நாம் கேட்கின்றோம்.

யா அல்லாஹ்! எங்களின் இந்தப் பயணத்தை இலகுவாக்கி, அதன் தொலை தூதரத்தை எமக்கு சுருக்கித் தருவாயாக!
யா அல்லாஹ்! நீயே பணயத்தின் தோழனும் குடும்பத்தின் பிரதி நிதியுமாவாய். யா அல்லாஹ்! பயணத்தின் சிரமங்கள், பார்வரயால் விளையும் தீய சோர்வு கவலை, மற்றும் தீய விபத்துக்களில் இருந்து நான் உன்னிடம் பாதுகாப்பு வேண்டுகின்றேன். (ஆதார நூல்: முஸ்லிம்).

## தக்பீர், தஸ்பீஹ் கூறுதல்.

பள்ளத்தாக்கை நோக்கி கீழிறங்கும் போதும், அதில் இருந்து மேல் நோக்கி ஏறும் போதும் اللَّهُ أَكْبَرُ اللَّهُ أَكْبَرُ لَا إِلَهَ إِلَّا اللَّهُ ***“அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், லாயிலாஹ இல்லல்லாஹ்.”*** என்று தாழ்ந்த குரலில் கூறுதல் . (ஆதார நூல்: புகாரி).

**சமதரையில்** செல்கின்ற போதும், அதில் இருந்து கீழ் நோக்கி பயணிக்கும் போதும் سُبْحَانَ اللهِ ***“சுப்ஹானல்லாஹ்”*** என்றும் கூறுதல் (ஆதார நூல்: புகாரி).

# ஹஜ், உம்ரா தொடர்பான திக்ர் துஆக்கள்.

-----------------

## உம்ராவிற்கான எல்லையை அடைந்ததும்

அல்லாஹ்வே! உனக்காக உம்ராவை நிறைவேற்றுகிறேன்” என மனதால் நினைத்து اَللّٰهُمَّ لَبَّيْكَ عُمْرَةً நாவினால் ***“அல்லாஹும்ம லெப்பைக உம்ரதன்”*** என நாவினால் தல்பியாக் கூறிக் கொள்ளுதல்.

## பயணம் தடைப்படுவதை அஞ்சினால்...

اللَّهُمَّ إِنْ حَبَسَنِيْ حَابِسٌ فَمَحِلِّي حَيْثُ حَبَسْتَنِي

***“அல்லாஹும்ம இன்ஹ(ட)பஸனீ ஹா(B)பிஸுன் (F)ப மஹல்லீ ஹைது ஹ (B)பஸ்தனீ”*** எனக் கூறுதல்.

**பொருள்:** “அல்லாஹ்வே! எந்த இடத்தில் என்னை நீ தடுக்கின்றாயோ அதுவே எனது (இஹ்ராத்தைக் களையும்) இடமாகும். என நினைத்துக் கொள்ளல். (முஸ்லிம்)

# தல்பியா

لَبَّيْكَ اللَّهُمَّ لَبَّيْكَ لَبَّيْكَ لَا شَرِيكَ لَكَ لَبَّيْكَ إِنَّ الْحَمْدَ وَالنِّعْمَةَ لَكَ وَالْمُلْكَ لَا شَرِيكَ لَكَ

**உச்சரிப்பு:-** ***"லெப்பைக், அல்லாஹும்ம லெப்பைக், லெப்பைக் லாஷரீக லக லெப்பைக், இன்னல் ஹம்த, வன்னி.ஃ.மத லக, வல்முல்க். லாஷரீக லக்."*** (புகாரி, முஸ்லிம்).

**பொருள்:** அல்லாஹ்வே! உனது அழைப்புக்கு விடை கொடுத்து, உனக்கு மேலும் மேலும் வழிப்பட்டுவிட்டேன்.

அல்லாஹ்வே! உனது அழைப்புக்கு விடை கொடுத்து, உன்னை மேலும் மேலும் வழிப்பட்டுவிட்டேன். உனக்கு இணையான எந்த தெய்வமும் கிடையாது. புகழும், அருளும், ஆட்சியும் உனக்கே உரியன. உனக்கு இணையான எந்த தெய்வமும் கிடையாது.

# தவா.ஃ.பின் போது

### ஹஜருல் அஸ்வதில் இருந்து தொடங்கும் போது

### اللهُ أَكْبَرُ "அல்லாஹு அக்பர்" எனக் கூறித் தொடர்தல்.

பின்னர், க.ஃ.பாவின் "ருக்னுல் யமானி" க.ஃ.பாவின் வலது மூலையை முத்தமிடாது, கையினால் தொடுவதுடன்,

رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ

**"ர(B)ப்பனா ஆதினா (F)பித்துன்யா ஹஸனதன், வ(F)பில் ஆஹிரதி ஹஸனதன், வகினா அதா(B)பன்னார்."**

**பொருள்:** எங்கள் இரட்சகனே! இம்மையிலும், மறுமையிலும் எமக்கு நல்லதை தருவாயாக! நரக நெருப்பிலிருந்து எம்மைப் பாதுகாப்பாயாக! எனக் கூறி பிரார்த்தித்தல்.

**குறிப்பு:** பின்வரும் துஆக்கள் பலவீனமானவையாகும். ஆகவே அதனைக் கூற வேண்டியதில்லை.

بسمِ اللَّهِ واللَّهُ أَكبرُ اللَّهُمَّ إيمانًا بِكَ وتصديقًا بِكتابِكَ ووفاءً بعَهدِكَ واتِّباعًا لسنَّةِ نبيِّكَ محمَّدٍ

اللَّهمَّ اجعَلهُ حجًّا مبرورًا، وسعيًا مشكورًا، وذنبًا مغفورًا

## ஸ.்.பா, மர்வாவில் ஓதும் திக்ர்

“ஸ(கு)பா” மலை மீது ஏறி, பின்வரும் அல்குர்ஆன் வசனத்தையும், திக்ரையும் ஓதி முடித்த பின்னர் க.்.பாவை முன்னோக்கியவாறு நமக்குத் தேவையானவைகளை வேண்டி துஆவின் ஒழுங்கைப் பேணி பிரார்த்தித்தல்.

### குர்ஆன் வசனம்:

إِنَّ الصَّــفَا وَالْمَرْوَةَ مِن شَــعَآئِرِ اللهِ فَمَنْ حَجَّ الْبَيْتَ أَوِ اعْتَمَرَ فَلاَ جُنَاحَ عَلَيْهِ أَن يَطَّوَّفَ بِهِمَا وَمَن تَطَوَّعَ خَيْراً فَإِنَّ اللهَ شَاكِرٌ عَلِيمٌ (البقرة : ١٥٨)

**“இன்னஸ்ஸ(F)பா வல்மர்வத மின்ஷஆயிரில்லாஹ். (F)பமன் ஹஜ்ஜல் (B)பைத, அவி.்.தமற (F)பலா ஜுனாஹ அலைஹி அய்யத்தவ்வ(F)ப (B)பிஹிமா, (F)பமன் ததவ்வஅ ஹைரன் (F)பஇன்னல்லாஹ ஷாகிருன் அலீம்.”**

**பொருள்:** நிச்சயமாக ஸ(கு)பாவும், மர்வாவும் அல்லாஹ்வின் சின்னங்களில் உள்ளவையாகும். எவர் இந்த ஆலயத்தை (க.்.பாவை) “ஹஜ்” அல்லது “உம்ரா” செய்கிறாரோ அவர் அவை இரண்டிற்கும் இடையில் வலம் வருவது குற்றமில்லை. எவர் உபரியாக நன்மை செய்கிறாரோ (அவருக்கு) நிச்சயமாக அல்லாஹ் நன்றியுடையவன். யாவற்றையும் நன்கு அறிந்தவன். (அத்: அல்பகரா: வச:158).

### திக்ர்:

لاَإِلَهَ إِلاَّ اللّهُ وَحْدَهُ لاَ شَــرِيكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَــيْءٍ قَدِيرٌ أَنْجَزَ وَعْدَهُ وَنَصَرَ عَبْدَهُ وَهَزَمَ الْأَحْزَابَ وَحْدَهُ .

***“லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா-ஷரீகலஹு, லஹுல் முல்கு வலஹுல் ஹம்து, வஹுவ அலா குல்லி ஷையின் கதீர், அன்ஜ(Z)ஸ வ.்.தஹு, வநஸர அ(B)ப்தஹு, வஹஸ(Z)மல் அஹ்-(Z)ஸா(B)ப வஹ்தஹ்.”*** (புகாரி, முஸ்லிம்).

**பொருள்:** வணக்கத்திற்கு தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு எந்த இணைதுணையும் இல்லை. ஆட்சியும், புகழும் அவனுக்கே உரியன. அவன் அனைத்து வஸ்துக்கள் மீதும் பேராற்றல் மிக்கவன். அவன் தனது வாக்கை நிறைவேற்றினான். அவனது அடியாருக்கு (முஹம்மத

நபிக்கு) உதவி செய்தான். (நமது) எதிரிகளை தனித்தவனாக அவன் தோற்கடித்தான்.

## துல்ஹஜ் எட்டாம் நாள்.

ஹஜ்ஜுக்காக தாம் இருக்கும் இடங்களில் இருந்தவாறே اَللّٰهُمَّ لَبَّيْكَ حَجًّا *"அல்லாஹும்ம லெப்பைக்க ஹஜ்ஜன்"* எனக் கூறி இஹ்ராம் அணிதல்.

## துல்ஹஜ் ஒன்பதாம் நாளில்

இது ஹாஜிகள் அர.்.பாவில் கூடும் நாள். ழுஹர், மற்றும் அஸர் தொழுகைகளை ழுஹர் நேரத்தில் ஜம்வு கஸ்ராகத் (சேர்த்து சுருக்கித்) தொழுத பின் இம்மை மறுமையின் பேறுகளை வேண்டி தனித்தனியே பிரார்த்தனை செய்வது நபி (ஸல்) அவர்கள் காட்டித் தந்த வழிமுறையாகும்.

## துல்ஹஜ் 10, 11, 12 நாட்களில்

**ஜம்ராக்களுக்கு கற்கள் வீசும் போது**

الله أكبر *"அல்லாஹு அக்பர்"* الله أكبر *"அல்லாஹு அக்பர்"* என்ற உண்ணத வாசகத்தை உச்சரித்தபடியே எறிதல்.

## ஸியாரத்தின் போது கூறவேண்டிய பிரார்த்தனை

السَّلَامُ عَلَيْكُمْ دَارَ قَوْمٍ مُؤْمِنِينَ وَإِنَّا إِنْ شَاءَ اللَّهُ بِكُمْ لَاحِقُونَ

***"அஸ்ஸலாமு அலைக்கும் (D)தார கௌமின் மு.்.மினீன். வஇன்னா இன்ஷா அல்லாஹு பிகும் லாஹிகூன்"*** (புகாரி).

**பொருள்:** இறை நம்பிக்கையாளர் கூட்டமே உங்கள் மீது சாந்தி நிலவட்டும். அல்லாஹ்வின் நாட்டப்படி நாமும் உங்களுடன் இணையக் கூடியவர்களே!

**மற்றுமொரு துஆ.**

اَلسَّلاَمُ عَلَيْكُمْ دَارَ قَوْمٍ مُؤْمِنِيْنَ وَأَتَاكُمْ مَا تُوْعَدُوْنَ. غَدًا مُؤَجَّلُوْنَ وَإِنَّا إِنْ شَاءَ اللهُ بِكُمْ لاَحِقُوْنَ

*"அஸ்ஸலாமு அலைகும் (D)தார கைமின் மு.்.மினீன். வ-அதாகும் மா-தூஅ(D)தூன். ந(D)தன் முஅஜ்ஜலூன். வஇன்னா இன்ஷா அல்லாஹு பிகும் லாஹிகூன்"*

**பொருள்:** இறை நம்பிக்கையாளர் கூட்டமே உங்கள் மீது சாந்தி நிலவட்டும். உங்களுக்கு விதிக்கப்பட்டது உங்களை வந்தடைந்து விட்டது. நாம் நாளைவரை விட்டுவைக்கப்பட்டிருக்கிறோம். அல்லாஹ்வின் நாட்டப்படி நாமும் உங்களை வந்தடையக் கூடியவர்களே!

**மற்றுமொரு துஆ.**

السَّلَامُ عَلَى أَهْلِ الدِّيَارِ مِنْ الْمُؤْمِنِينَ وَالْمُسْلِمِينَ وَيَرْحَمُ اللَّهُ الْمُسْتَقْدِمِينَ مِنَّا وَالْمُسْتَأْخِرِينَ وَإِنَّا إِنْ شَاءَ اللَّهُ بِكُمْ لَلَاحِقُونَ (مسلم)

*"அஸ்ஸலாமு அஹ்லித்(D)தியாரி மினல் மு.்.மினீன் வல்முஸ்லிமீன் வயர்ஹமுல்லாஹுல் முஸ்தக்(D)திமீன மின்னா, வல் முஸ்த.்.ஹிரீன். வஇன்னா இன்ஷா அல்லாஹு பிகும் லாஹிகூன்"*

**பொருள்:** நம்பிக்கையாளர்களான, முஸ்லிம்களான வீட்டுடையார் மீது (அல்லாஹ்வின்) சாந்தி நிலவட்டுமாக! எம்மில் முந்திச் சென்றோருக்கும், பின்னால் வருவோருக்கும் அல்லாஹ் அருள்பாலிப்பானாக! அல்லாஹ்வின் நாட்டப்படி நாமும் உங்களை வந்தடையக் கூடியவர்களே!

நமது ஹஜ், மற்றும் உம்ராக் கடமைகளை அல்லாஹ் அங்கீகரித்து அருள் செய்வானாக!

## விடுபட முடியாத உம்ராவின் கடமைகள்.

(1) நிய்யத் வைத்து -இஹ்ராமில் நுழைதல்.

(2) க.்.பாவை ஏழு தடவைகள் தவா.்.ப் செய்தல்,

(3) ஸ.்.பா, மர்வாவிற்கு மத்தியில் ஏழு தடவைகள் ஸ.்.ய் செய்தல்,

**குறிப்பு:** விடுபட முடியாத மேற்படி நிறைவேற்ற வேண்டிய கடமைகளை ஒருவர் விட்டு விடுவதால் அவரது உம்ரா பாழாகிவிடும்.

## .்.பித்யா மூலம் நிவர்த்திக்க முடியுமான ஹஜ்ஜின் வாஜிபுகள்

(1) எல்லையில் இருந்து இஹ்ராம் ஆடை அணியாது நிய்யத்துடன் மாத்திரம் வருதல்.

(2) தலை முடியை முழுமையாக மழித்தல், அல்லது முழுமையாகக் குறைத்தல்.

**குறிப்பு:** மேற்படி இரண்டாம் நிலைக் கடமைகளை விடுவதால் அதனை .்.பித்யா மூலம் நிவர்த்திக்கலாம்.

## விடுபட முடியாத ஹஜ்ஜின் கடமைகள்.

(1) நிய்யத் வைத்து -இஹ்ராமில் நுழைதல்.

(2) ஸ.்.பா மர்வாவிற்கு மத்தியில் ஏழு தடவைகள் ஸ.்.ய் செய்தல்,

(3) அர.்.பாவில் பகலில் தரித்தல். தவறும் பட்சத்தில் இரவில் சில மணி நேரம் தரித்தல்.

**குறிப்பு:** மேற்படி விடுபடக்கூடாத ஹஜ்ஜின் கடமைகளை ஒருவர் நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் அவரது ஹஜ் செல்லுபடி அற்றதாகி விடும்.

## ஃபித்யா மூலம் நிவர்த்திக்க முடியுமான ஹஜ்ஜின் வாஜிபுகள்.

1) எல்லையில் இருந்து இஹ்ராம் அணிதல்.
2) அரஃபாவுக்கு பகலில் சமூகமளித்தவர் சூரியன் மறையும் வரை அரஃபாவில் தரித்தல்.
3) விதிவிலக்களிக்கப்பட்டவர்களைத் தவிர, மற்ற அனைவரும் முஸ்தலிஃபாவில் இரவில் தரித்தல்.
4) தேவை உடையோரைத் தவிர்த்து பிறை 10,11,12 ஆகிய நாட்களில் மினாவில் இரவு காலங்களில் தரித்தல்.
5) ஜம்ராக்களுக்கு கல்லெறிதல்.
6) தலை முடியை முழுமையாக மழித்தல், அல்லது முழுமையாகக் குறைத்தல்.
7) தவாஃபுல் வதா- பிரியாவிடை பெறும் இறுதித் தவாஃப்.

குறிப்பு: வாஜிபான ஒரு கிரிகையை விடுபவர் மீது பலிப் பிராணி கடமையாகும். அது தொடர்பான தெளிவான விளக்கத்தை ஆலிம்களை நாடிப் பெறவும்.

## இஹ்ராம் அணிந்த நிலையில் தடுக்கப்பட்டவை.

(1) தலைமுடியை மழித்தல், அல்லது குறைத்தல். (நகமும் இத்தோடு இணைக்கப்படுகின்றது.

(2) ஆண்கள் தலையை மூடுதல்.

(3) ஆண்கள் சேட், ட்ரவ்ஸர், அண்டர்வெயார், பெனியன் போன்ற தைக்கப்பட்ட ஆடைகளை அணிதல்.

(4) இஹ்ராமுடைய நிலையில் ஆடையில், அல்லது உடலில் மணம் பூசுதல். இஹ்ராம் அணியும் முன்னர் உடம்பில் பூசப்பட்ட வாசனையின் வாடை உடம்பில் காணப்படுவது குற்றமில்லை.

(5) தரைவாழ் மிருகங்களைக் கொல்லுதல், அல்லது வேட்டையாடுதல்

(6) திருமண ஒப்பந்தம் செய்தல்.

(7) பெண்கள் முகத்தை மறைத்தல், அல்லது இரு மணிக்கட்டுகளுக்கும் கையுறை அணிதல்.

(8) ஹஜ், உம்ராக் கடமை முடியுமுன் இல்லற உறவில் ஈடுபடுதல்.

(9) காலுறைகள் அணிதல்.

(10) மனைவியைக் கட்டியணைப்பதால், அல்லது சுயஇன்பம் பெறுவதால் இந்திரியம் வெளியேறுதல்.

## இஹ்ராத்தின் சுன்னத்துக்கள்:

(1) இஹ்ராமுக்காக குளித்த பின் உடலில் வாசனை பூசுதல்.

(2) இரு வெண்ணிற ஆடைகள் அணிதல்.

(3) தல்பியாக் கூறுதல்.

(4) தவா:.பின் போது ஏழு சுற்றுகளிலும் வலது தோள் புயம் திறந்திருத்தல்.

(5) முதல் மூன்று சுற்றில் “ரம்ல்” ஓடுதல்.

(6) மகாமு இப்ராஹீமிற்கு பின்னால் இரண்டு ரகஅத் தொழுதல்.

(7) ஸம்ஸம் நீர் அருந்துதல். பின்பு, ஹஜருல் அஸ்வதைத் தொடுதல்.

(8) “ஸ:.பா” மர்வாவில் ஓத வேண்டிய வசனத்தையும், திக்ரையும் ஓதுதல்.

(9) “ஸ:.பா” “மர்வா”வில் இரு பச்சை வெளச்சங்களுக்கும் இடையில் வேகமாக ஓடுதல்.

(10) ஸ.ீ.ய் செய்கின்ற போது கிப்லாவை முன்னோக்கியவாறு பிரார்த்தனை செய்தல்.

(11) இ.ீ.ப்ராத் மற்றும் கிரான் முறையில் ஹஜ் செய்வோர் தவா.ீ.புல் குதூம் என்ற ஆரம்ப தவா.ீ.ப் செய்தல்.

ஹஜ்ஜின் சுன்னத்துக்களும் பல உள்ளன. அவற்றை ஒருவர் விடுவதால் நன்மையில் குறை ஏற்படும். அவற்றையும் ஆலிம் உலமாக்களிடம் கேட்டறிந்து செயல்படுவோம்.

தொகுப்பு:

**எம்.ஜே. எம். ரிஸ்வான் மதனி**

26-05-2023